# <u>சேலம் மாநகராட்சி</u>

**2022ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு சேலம் மாநகராட்சியின் மாமன்றக்கூடத்தில் மாநகராட்சி சட்டம் அட்டவணை 1, பத்தி 3(1)ன் கீழ் சேலம் மாநகராட்சியின் இயல்புக்கூட்டம் நடைபெறும்.**

---

## <u>பொருள்கள்</u>

**1)** அரசாணை (எம்.எஸ்) எண். 21, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள். 30.05.2017ல் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் சட்டம் 2016 பிரிவு 34ன்படி, கீழ்க்கண்டுள்ளவாறு உடல் குறைபாடுகளை வகைப்படுத்தி, அரசு வேலைவாய்ப்பில் 4% இட ஒதுக்கீடு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் அனைத்து மாநில பொது சேவைகள்/ பொதுத்துறை நிறுவனங்கள் / வாரியங்கள் / மாநகராட்சிகள் / கல்வி நிறுவனங்கள் (அரசு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உட்பட அரசு நிதிஉதவி பெறும் நிறுவனங்கள்) என அனைத்திற்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | உடல் குறைபாடுகள் | இட ஒதுக்கீடு சதவீதம் |
|---|---|---|
| 1. | பார்வைக்குறைபாடு | % 1 |
| 2. | செவிக்குறைபாடு | % 1 |
| 3. | உடல் இயக்கக் குறைபாடு | % 1 |
| 4. | அறிவுசார் குறைபாடு | % 1 |
| 5. | பன்முகக் குறைபாடுகள் (பார்வையின்மையோடு செவித்திறன் குறைபாடு உட்பட) | |

இணை இயக்குநர் (மாநகராட்சி), நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.எம்.சி.ஏ3. 12688, நாள்.17.05.2022 ன்படி சேலம் மாநகராட்சியில் C மற்றும் D தொகுதிகளில் உள்ள அனைத்து பதவியிடங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் 4% இடஒதுக்கீட்டின் அடிப்படையில் காலிப்பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி அரசாணை மற்றும் கடிதங்களில் தெரிவித்துள்ளவாறு, இனிவருங்காலங்களில் இம்மாநகராட்சியின் பணிவிதிகளின்படி C மற்றும் D தொகுதிகளில் உள்ள அனைத்து பணிநியமன நடவடிக்கைகளுக்கும் மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி (நேரடி மற்றும் வாரிசுபணி மூலமாக) காலிப்பணியிடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கென 4% இடஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைமுறைப்படுத்துவதற்கு மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மாமன்றம் பதிவு செய்யலாம்.

(சி2/8020/2022)

தீர்மானம். பதிவு செய்யப்பட்டது.

**2)** சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.31–ல் புதியதாக கட்டப்பட்டுள்ள கோட்டை சின்னசாமி தெரு வாகன நிறுத்தும் இடம் தரைதளம் மற்றும் கோட்டை வணிக வளாக தரை தளம் மற்றும் முதல் தள கடைகளுக்கு 27.05.2022 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உச்ச கேள்வி கோரியவர்களின் விபரம் பட்டியல் கீழ் கண்டுள்ளவாறு

| வ. எண் | கடை அமைவிடம் | கடை எண் | பெயர் / முகவரி | ஒப்பந்தப்புள்ளி | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | கோட்டை சின்னசாமி தெரு வாகன நிறுத்தும் இடம் தரைதளம் | – | எம்.அஸ்மத்துல்லாகான், த/பெ மகபூப்கான், 84/1, சின்னசாமி தெரு, கோட்டை, சேலம் 636 001. | 25025/– | அரசு மதிப்பை விட ரூ.325/– அதிகம் |
| 2 | கோட்டை வணிக வளாக தரை தளகடைகள் | 15 | பி.சிராஜுதீன் 10/16, முகமது காசிம் தெரு கோட்டை சேலம்–1 | 3300/– | அரசு மதிப்பை விட ரூ.50/– அதிகம் |
| 3 | | 16 | திருமதி. D.நிஷா க.எண். 327/2 குப்தா நகர் , 6 குறுக்குதெரு அங்கம்மாள் காலனி சேலம்–9 | 2400/– | அரசு மதிப்பை விட ரூ.100/– அதிகம் |
| 4 | கோட்டை வணிக வளாக முதல் தள கடை | 5 | A.S.முகம்மதுரபி த/பெ அப்துல்சத்தார் 23/27, பால் தெரு கோட்டை சேலம்–1 | 3166/– | அரசு மதிப்பை விட ரூ.16/– அதிகம் |

அரசு மதிப்பை விட உச்சகேள்வி கோரிய ஒப்பந்ததாரர்களுக்கு கோட்டை சின்னசாமி வாகன நிறுத்தம் தரை தளம் மற்றும் கடைகள் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மாநகராட்சி வருவாயை பெருக்கும் வகையில் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் வாகன நிறுத்தும் இடம் மற்றும் கடைகளை வாடகைக்கு விட எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

**(ஜே4/504/2021)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**3)** சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.12ல் உள்ள ஜான்சன்பேட்டை மணல் லாரி வாகன நிறுத்த சுங்கக் கட்டண வசூல் குத்தகை இனத்திற்கு உரிமம் பெற்ற ஒப்பந்ததாரரின் குத்தகை காலம் 31.03.2022–ல் முடிவடைந்துள்ளது.

மறு ஒப்பந்தப்புள்ளி கோரும்வரை 01.04.2022 முதல் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது. அரசு மணல் எடுக்க தடை விதித்துள்ளதால் துறைமூலம் தொகை ஏதும் வசூல் செய்யப்படவில்லை. மேலும் 07.04.2022, 25.04.2022 மற்றும் 13.05.2022 தேதிகளில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முன் வைப்புத்தொகை செலுத்தி எவரும் ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. மேலும் அரசு மணல் எடுக்க தடை விதித்துள்ளதாலும், மேற்படி குத்தகை இனத்திற்கு மணல் லாரிகள் ஏதும் வருவதில்லை என்பதாலும் ஜான்சன்பேட்டை மணல் லாரி வாகன நிறுத்த சுங்கக் கட்டண வசூல் குத்தகை இனத்தை தற்காலிகமாக குத்தகை இனத்திலிருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

அனுமதிக்கலாம்.

**(ஜே4/122/2016)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

4) சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம் கோட்டம் எண் 45ல் 15 குடிநீர் இணைப்புகள், 46ல் 8 குடிநீர் இணைப்புகள், 47ல் 2 குடிநீர் இணைப்புகள், 51ல் 2 குடிநீர் இணைப்புகள், 53ல் 4 குடிநீர் இணைப்புகள், 55ல் 5 குடிநீர் இணைப்புகள், 56ல் 2 குடிநீர் இணைப்புகள், 57ல் 3 குடிநீர் இணைப்புகள், 59ல் 2 குடிநீர் இணைப்புகள் மற்றும் 60ல் 1 குடிநீர் இணைப்பு மொத்தம் 44 குடிநீர் இணைப்புகள் 1987–1988ஆம் ஆண்டு முதல் கணினியில் தொடர்ந்து கேட்பு இருந்து வருகிறது. குழாய் பொருத்துநர்கள் மற்றும் உதவிப்பொறியாளர்கள் நேரடியாக ஆய்வு செய்ததில், குடிநீர் இணைப்புகள் துண்டிப்பு நிலையில் உள்ளது. மேலும், குடிநீர் கட்டணத்தொகை பல வருடங்களாக செலுத்தாத காரணத்தினால், குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்ட இனங்கள் மற்றும் விருப்பத்தின்பேரில் துண்டிப்பு செய்யப்பட்ட இனங்கள் ஆகியவை குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்ட தேதிக்கு பிறகு கணினியில் தொடர்ந்து கேட்பு நிலுவையாக வருகிறது. எனவே,நிலுவையாக வரும் குடிநீர் கட்டண தொகையை கீழ்கண்ட அட்டவணைப்படி மொத்தம் ரூ.21,11,299/–ஐ கேட்பிலிருந்து நீக்கம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| குடிநீர் கட்டணம் துண்டிப்பு விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | கோ. எண் | எண்ணிக்கை | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| 1 | 45 | 15 | 11,03,545 | 1,44,048 | 12,47,593 |
| 2 | 46 | 8 | 81,624 | 1,812 | 83,436 |
| 3 | 47 | 2 | 57,699 | 0 | 57,699 |
| 4 | 51 | 2 | 12,004 | 0 | 12,004 |
| 5 | 53 | 4 | 75,345 | 0 | 75,345 |
| 6 | 55 | 5 | 2,40,106 | 0 | 2,40,106 |
| 7 | 56 | 2 | 1,36,291 | 1,812 | 1,38,103 |
| 8 | 57 | 3 | 1,17,096 | 0 | 1,17,096 |
| 9 | 59 | 2 | 13,875 | 0 | 13,875 |
| 10 | 60 | 1 | 1,26,042 | 0 | 1,26,042 |
| மொத்தம் | | 44 | 19,63,627 | 1,47,672 | 21,11,299 |

மேற்கண்ட குடிநீர் இணைப்பு விபரம் தனித்தனியாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், குழாய் பொருத்துநர்கள், உதவிப்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர், உதவி ஆணையாளர், உதவி ஆணையர் வருவாய்(பொ) மற்றும் மாநகரப்பொறியாளர் ஆகியோர் சான்றொப்பம் செய்துள்ளனர். இந்த இனத்திற்கான கேட்பு 1987–1988ஆம் ஆண்டு முதல் கணினியில் தொடர்ந்து இருந்து வருவதால் இக்கேட்புத்தொகை ரூ.21,11,299/–ஐ நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

**(எம்18/2157/2022)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

5) சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம் கோட்டம் எண் 47ல் 4 குடிநீர் இணைப்புகள், 48ல் 2 குடிநீர் இணைப்புகள், 50ல் 2 குடிநீர் இணைப்புகள், 51ல் 3 குடிநீர் இணைப்புகள், 52ல் 1 குடிநீர் இணைப்பு, 55ல் 4 குடிநீர் இணைப்புகள், 57ல் 1 குடிநீர் இணைப்பு, 59ல் 20 குடிநீர் இணைப்புகள் மற்றும் 60ல் 2 குடிநீர் இணைப்புகள் மொத்தம் 39 இணைப்புகள் கணினியில் இருமுறை பதிவாகியுள்ளது. குடிநீர் கட்டணம் இருமுறை பதிவை குழாய் பொருத்துநர்கள் மற்றும் உதவிப்பொறியாளர்கள் நேரடியாக ஆய்வு செய்ததில், குடியிருப்பில் ஒரு இணைப்பு மட்டுமே பெற்றுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்த முகவரியில் இரண்டு இணைப்புக்கான கேட்பு வருகிறது, ஒரு இணைப்பிற்கான கேட்பு நாளது தேதி வரை தொகை செலுத்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. எனவே, இருமுறை தவறுதலாக பதிவாகியுள்ள மற்றொரு கேட்பு தொடர்ந்து நிலுவையாக வருகிறது. மேலும், குழாய் பொருத்துநர்கள், உதவிப்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர், உதவி ஆணையாளர், உதவி ஆணையர் வருவாய்(பொ) மற்றும் மாநகரப்பொறியாளர் ஆகியோர் சான்றொப்பம் செய்துள்ளனர். எனவே, நிலுவையாக வரும் குடிநீர் கட்டண தொகையை கீழ்கண்ட அட்டவணைப்படி மொத்தம் ரூ.6,25,121/– நீக்கம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| குடிநீர் கட்டணம் இருமுறை பதிவு விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ எண் | கோ எண் | எண்ணிக்கை | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| 1 | 47 | 4 | 33,975 | 7,248 | 41,223 |
| 2 | 48 | 2 | 56,819 | 0 | 56,819 |
| 3 | 50 | 2 | 14,496 | 3,624 | 18,120 |
| 4 | 51 | 3 | 27,633 | 5,436 | 33,069 |
| 5 | 52 | 1 | 9,211 | 1,812 | 11,023 |
| 6 | 55 | 4 | 29,143 | 7,248 | 36,391 |
| 7 | 57 | 1 | 35,053 | 1,812 | 36,865 |
| 8 | 59 | 20 | 3,04,259 | 68,628 | 3,72,887 |
| 9 | 60 | 2 | 15,100 | 3,624 | 18,724 |
| மொத்தம் | | 39 | 5,25,689 | 99,432 | 6,25,121 |

மேற்கண்ட குடிநீர் இணைப்பு விபரம் தனித்தனியாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இனத்திற்கான கேட்புகள் 1996–1997ஆம் ஆண்டு முதல் கணினியில் இருந்து வருவதுடன் தொடர்ந்து வருவதால் தவறுதலாக பதிவாகியுள்ள இக்கேட்பினை நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

அனுமதிக்கலாம்.

(எம்18/2156/2022)

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

**6)** சேலம் மாநகராட்சி, நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) **2021–22**ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், (அரசாணை G.O.(MS)No.71, Date : 13.09.2021 ) – வழிகாட்டுதலின்படி இராசி நகர் பகுதி பொதுமக்களிடம் கடிதமும் மற்றும் **33%** பங்களிப்பு தொகை (**ரூ.4,50,000**) பெறப்பட்ட வகையில் **(1 ).** சிட்டி யூனியன் வங்கி லிட்., (சேலம் மெயின் **42)** வரைவோலை (Demand Draft) எண்: **790163**, நாள்.**19.03.2022**, **(2)** ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா (சேலம் கிளை) வரைவோலை (Demand Draft) எண்: **696113**, நாள்.**25.03.2022**, **(3).** AXIS Bank Ltd., (Salem Branch) வரைவோலை (Demand Draft) எண்: **065999**, நாள்.**25.03.2022**, மற்றும் அரசின் பங்களிப்பு **67%** (**ரூ.9,00,000**) என்ற விகிதத்தின் அடிப்படையில், மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.**13,50,000/–** த்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண். **02**, ஜாகீர் அம்மாபாளையம், இராசி நகர் **6**வது கிராஸ்–ல் சிறு பாலம் அமைத்து மழை நீர் வடிகால் மற்றும் கால்வாய் அமைக்கும் பணி (Renavation of Storm Water Drain at Rasi Nagar, Cross 6, in Division No,2) கட்டும் பணியை நிறைவேற்றிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ROC.No.28244-22/2021/P2, Date:30.03.2022–ன் மூலம் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின் படி, மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.13,50,000/-க்கு E3/NNT/EST.No.486/D/2021-2022 Date:13.05.2022 தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு **01.06.2022–ல்** ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.** | **ஒப்பந்தபுள்ளி சதவீதம்** | **வைப்புத் தொகை செலுத்திய விபரம்** |
|---|---|---|---|---|
| **1** | M/s. Shiva Engineering Work ,<br>11/5, Subramaniya Nagar,<br>Mecheri, Salem. | ரூ.11,49,196.64<br>**அல்லது**<br>ரூ.11,49,196.00 | -0.10 % Less | TERM DEPOSIT ADVICE<br>Customer ID No. 132358362<br>A/c.No.18130400005307<br>Date.27.05.2022<br>Deposit Amount Rs.13,500<br>FEDERAL Bank,<br>Mecheri Branch, Salem. |
| **2** | M/S. Phoenix & Co.,<br>4/87, Karattur,<br>Vadugapatti (Po),<br>Konganapuram,<br>Edappadi.<br>Salem- 637 102. | ரூ.11,86,323.87 | 3.12 % More | Indian Bank,,<br>Mecheri Branch, Salem.<br>DD No : 323229<br>Rs. 13,500/-,<br>Date: 27.05.2022 |

அ). மேற்காணும் வரிசை எண்.**1**ல் கண்டுள்ள M/s. Shiva Engineering Work, Salem. **(L1)** என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.10** % ரூ.11,49,196.00/– குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு, பணி ஆணை வழங்கி, பணியை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ). மேற்காணும் பணிக்கு ஆகும் செலவினத்தை **2021–2022**ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) திட்ட நிதி, மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ). பணியின் அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கிடவும், பணிமேற்கொள்ள எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

அ) மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கி அங்கீகரிக்கலாம்.

**(E3/NNT/ 4174/ 2022)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அங்கீகரிக்கப்பட்டது.

**7)** சேலம் மாநகராட்சி, நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) **2021–22**ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், (அரசாணை G.O.(MS)No.71, Date : 13.09.2021 ) – வழிகாட்டுதலின்படி செவ்வாய்பேட்டை சௌராஷ்ட்ரா மாருதி அசோசியேஷன் அவர்களிடம் கடிதமும் மற்றும் **33%** பங்களிப்பு தொகையினை Tamilnadu Mercantile Bank Ltd, வங்கி வரைவோலை எண்.**584620** ரூ.**3,67,000/–** நாள்:**23.03.2022** மற்றும் அரசின் பங்களிப்பு **67%** (ரூ.**7,33,000**) என்ற விகிதத்தின் அடிப்படையில், மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.**11,00,000/–** த்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண். **30–**ல் கண்ணாரத் தெரு அருகில் கழிவுநீர் வாய்க்கால் மற்றும் கான்கிரீட் பாதை அமைத்தல் (Constructionnn of Drain and Formation of Cement Concrete Lane Near Kannara Street in Division 30 of Zone –II ) அமைக்கும் பணியை நிறைவேற்றிட நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ROC.No.28244-22/2021/P2, Date:30.03.2022–ன் மூலம் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதின்படி, மொத்தம் மதிப்பீடு தொகை ரூ.11,00,000/-க்கு E3/NNT/EST.No.487/D/2021-2022 Date:13.05.2022 தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு **01.06.2022–**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | ஒப்பந்தபுள்ளி சதவீதம் | வைப்புத் தொகை செலுத்திய விபரம் |
|---|---|---|---|---|
| **1** | M/s. MSR Construction, No.9, Kuberalakshmi Nagar, Judge Road, Kannankuruchi (Po), Salem – 636 008. | ரூ.9,39,344.50<br>**அல்லது**<br>ரூ.9,39,344.00 | -0.10 %<br>Less | Kamadhenu Deposit General<br>Customer ID No. 258638521<br>SLNo.KR585216,<br>A/C No.140004909870/3<br>Date.31.05.2022<br>Deposit Amount Rs.11,000<br>Canara Bank, Kondapanaikkenpatti Branch, Salem - 8. |
| **2** | M/s. Revathi Construction, 87/99A.Kennadi Nagar, Suramangalam (P.O), Salem -5. | ரூ.9,69,905.94 | 3.15 %<br>More | Canara Bank, Alagapuram Branch,<br>DD No : 016387<br>Rs. 11,000/-,<br>Date: 31.05.2022 |

அ). மேற்காணும் வரிசை எண்.**1**ல் கண்டுள்ள M/s. MSR Construction, Salem. **(L1)** என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.10** % ரூ.9,39,344.00/– குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு, பணி ஆணை வழங்கி, பணியை நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ). மேற்காணும் பணிக்கு ஆகும் செலவினத்தை **2021–2022**ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டம் (நகர்புறம்) திட்ட நிதி மற்றும் சௌராஷ்ட்ரா மாருதி அசோசியேஷன் பொதுமக்களின் பங்களிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ). பணியின் அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றத்தின் முன் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்புதல் பெற்று பணி ஆணை வழங்கிடவும், பணிமேற்கொள்ள எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :–**

அ) மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கி அங்கீகரிக்கலாம்.

**(E3/NNT/ 4305/ 2022)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு அ, ஆ அங்கீகரிக்கப்பட்டது.

**8)** சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், கோட்டம் எண். 13–ல் திருநகர் தெற்கு 2வது குறுக்குத் தெரு லேன்–ல் மழைநீர் வடிகால் சேகரிப்பு தொட்டி மற்றும் கழிவுநீர் பம்பிங் சிஸ்டம் அமைத்தல் (Construction of Storm Water Drain, Collection Sum and Sewage Water Pumping System at Thiru Nagar South 2nd Cross Lane-1 in Division No,13 of Hasthampatty Ward office ) நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புறம்) 2021 – 2022 கீழ் மேற்கொள்ள, (அரசாணை G.O.(MS)No.71 Date : 13.09.2021)-ன்படி விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது.

அதன்படி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம் கோட்டம் எண்.13–ல் திருநகர் தெற்கு 2வது குறுக்குத் தெரு லேன்–ல் மழைநீர் வடிகால் சேகரிப்பு தொட்டி மற்றும் கழிவுநீர் பம்பிங் சிஸ்டம் அமைத்தல் (Construction of Storm Water Drain, Collection Sum and Sewage Water Pumping System at Thiru Nagar South 2nd Cross Lane-1 in Division No,13 of Hasthampatty Ward office) நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.12.00 இலட்சத்தில் 50 சதவிகிதம் பங்களிப்பு தொகையினை திருநகர் 1வது குறுக்கு தெருவாழ்மக்கள் வழங்குவதாக ஒப்புக்கொள்ளப்பட்டதின் பேரில் மீதமுள்ள 50 சதவிகிதம் மாநில அரசின் நிதி பங்களிப்புடன் மேற்படி திட்டத்தை செயல்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மதிப்பீட்டிற்காக தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் உரிய நிர்வாக அனுமதி பெறவும், நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் தொழில் நுட்ப அனுமதி பெற்று பணி நிறைவேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மாமன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிகளை மேற்கொள்ள தேவையான நிதியினை 50 சதவிகிதம் பங்களிப்பு தொகையினை திருநகர் 1வது குறுக்கு தெருவாழ்மக்கள் வழங்குவதாக ஒப்புக்கொள்ளப்பட்டதின் பேரில். மீதமுள்ள 50 சதவிகிதம் மாநில அரசின் நிதி பங்களிப்புடன் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் உரிய நிர்வாக அனுமதி பெறவும், நிர்வாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் தொழில் நுட்ப அனுமதி பெறவும் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணிநிறைவேற்ற மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் அனுமதிக்கலாம்.

**(E3/NNT/ 10019/ 2022)**

தீர்மானம். அலுவலகக்குறிப்பு 1, 2, 3 அனுமதிக்கப்பட்டது.

9) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ற்கு சம்மந்தப்பட்ட அய்யந்திருமாளிகை தெருவில் சுமார் 40 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அந்த தெருவில் உள்ள மின் கம்பம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. கம்பம் கிழே விழுந்தால் அந்த தெருவில் உள்ள பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். எனவே அந்த கம்பத்தை எடுத்துவிட்டு அதற்கு பதிலாக புதிதாக மின்கம்பம் வைத்து (90 LED) பல்பு அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

10) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் உள்ள கம்பர் தெரு மற்றும் பாரதிநகர் தெருவில் உள்ள சாலைகள் 10 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்டது. தற்போது அவைகள் பழுது அடைந்து குண்டும் குழியுமாக உள்ளது. அந்த பகுதியில் நடந்து செல்வதற்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே கிழே உள்ள தெருவிற்கு

1. திருநகர் முதல் கம்பர் தெரு வரை
2. கம்பர் தெரு முதல் பொது கிணறு வரை
3. கம்பர் தெரு முதல் பாரதி நகர் வரை
4. கம்பர் தெரு முதல் பாரதி நகர் இணைப்பு சாலை வலதுபுறம் Two Wheeler பட்டறை பக்கம் குறுக்கு சாலை இணைப்பு.

ஆகிய பகுதிகளுக்கு புதிய தார்சாலை, வடிகால் மற்றும் சாக்கடை வசதி ஏற்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

11) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் உள்ள இடங்களில்

1. அய்யந்திருமாளிகை
2. சிண்டிகேட் வங்கி,
3. SCCB காலனி மற்றும்
4. வள்ளலார் தெருவில்

உள்ள இடங்களில் மழைநீர் வெளியே செல்ல முடியாமலும், தார்சாலை வசதி மற்றும் சாக்கடை வசதி இல்லாமலும், இரவு நேரங்களில் மழைநீர் வீட்டுக்குள் சென்று விடுகிறது. பல்வேறு நேரங்களில் மக்கள் சிரமத்திற்கு மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே அந்த தெருவிற்கு தேவையான அடிப்படை வசதிகளை மிக விரைவில் செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கின்றது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

12) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் உள்ள இடங்களில் மின்விளக்கு இல்லாமல் பொதுமக்கள் அவதிப்படுகிறார்கள்.

1. அய்யந்திருநடுத்தெரு
2. கம்பர்தெரு,
3. போயர் தெரு,
4. இந்திராதெரு
5. அய்யந்திருமாளிகை
6. லேக்வியூவ்நகர்,
7. ஜட்ஜ்ரோடு,
8. அரசு ஊழியர் குடியிருப்பு,
9. பள்ளக்காடு,
10. ஆத்துக்காடு
11. SCCB காலனி
12. சக்திநகர்
13. வள்ளலார் தெரு
14. பாலாஜி நகர்

ஆகிய தெருக்களுக்கு 50 லைட் (90 LED) பல்பு தேவைப்படுகிறது. மேற்படி பகுதிகளுக்கு தெருவிளக்கு வசதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

13) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ற்கு சம்மந்தப்பட்ட கல்யாணிநகர் உள்ள தெருவிற்கு இதுவரை மின்கம்பம் இல்லாமல் இரவு நேரங்களில் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். எனவே அந்த தெருவிற்கு புதிய மின்கம்பம் வைத்து அதற்கு மின்விளக்கு அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

14) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ற்கு சம்மந்தப்பட்ட பழைய வேலைவாய்ப்பு அலுவலகம் அருகில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி மிக மோசமாக பழுது அடைந்துள்ளதால் அதை இடித்துவிட்டு அதற்கு பதிலாக அரசு கலைக்கல்லூரி அருகில் உள்ள இடத்தில் புதிய நீர்தேக்க மேல்நிலைத்தொட்டி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

15) <u>திருமதி மா. சாரதாதேவி, துணைமேயர் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட கோட்டம் எண்.7ல் உள்ள கம்பர் தெருவில் மின்கம்பம் எண்.W-7/P 272, W-7/P 278, W-7/P 275 என்ற மின்கம்பமானது போக்குவரத்துக்கு இடஞ்சலாக நடுரோட்டில் உள்ளது. மேற்படி மின்கம்பம் அமைத்து சுமார் 40 வருடங்களுக்குமேல் ஆன படியால் தற்போது ரோடு, சாக்கடை போன்றவை அமைத்து பிறகும் அது நடுரோட்டில் உள்ளது. மேலும் மேற்படி மின்கம்பம் ரோடு வளைவு பகுதியில் உள்ளதால் இங்கு வந்த சிறு ஆட்டோ, கார், டெம்போ போன்றவை கூட வளைந்து செல்ல முடியவில்லை. மேலும் இதனால் அடிக்கடி விபத்து ஏற்பட்டு வருகிறது. ஆகவே மேற்படி மின்கம்பத்தை நடுரோட்டில் இருந்து அகற்றி ரோட்டின் ஓரமாக அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

16) **5வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி த.தனலட்சுமி அவர்களின் தீர்மானம்.**

அர்த்தனாரி கவுண்டர் தோட்டம் ரோடு, நாமகிரி அவென்யூ, மயான ஓடை ரோடு, கிருஷ்ணா கார்டன் குறுக்குத்தெருக்கள் ஆகிய பகுதிகள் தற்பொழுது மண்ரோடாக இருப்பதால், உடனடியாக இப்பகுதிகளில் தார்சாலைவசதி செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

17) **5வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி த.தனலட்சுமி அவர்களின் தீர்மானம்.**

ஏ.டி.சி.நகர், சாந்திநகர் மெயின் ரோடு, மிட்டாபுதூர் மெயின் ரோடு, கோவிந்தசாமி தெரு, மாரிமுத்து தெரு, பூசாரி தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்குவதால், மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். உடனடியாக, இப்பகுதிகளில் சாக்கடை வசதி செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

18) **5வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி த.தனலட்சுமி அவர்களின் தீர்மானம்.**

5வது கோட்டம் பகுதிகளில் பொதுமக்களின் நீண்டகால கோரிக்கையான சாக்கடை அமைக்கும் பணியை கீழ்கண்ட இடங்களில் செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. ஏ.டி.சி. நகர் மெயின் ரோடு,
2. சாந்திநகர் மெயின் ரோடு
3. மிட்டாபுதூர் மெயின் ரோடு.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

19) **9வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. வெ. தெய்வலிங்கம் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி 9வது கோட்டம் பகுதியில் மக்கள் தொகை அதிகம் வசித்துவரும் நிலையில் சாக்கடை வசதி இன்றியும், தார்சாலை வசதிகள் இல்லாத 36 தெருக்கள் கண்டறியப்பட்டு மண்ரோடுகள் தார்சாலைகளாக மாற்ற படிப்படியாக 36 மண்ரோடுகள் தார்சாலைகளாக வரும் காலங்களில் மாற்ற அவசர அவசியம் கருதி இம்மாமன்றம் தீர்மானிக்கிறது. அதன் அடிப்படையில் முதற்கட்டமாக கீழ்கண்ட சில தெருக்களுக்கு சாலை வசதிகள் மற்றும் சாக்கடை வசதி ஏற்படுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. பாரதியார் தெருக்கள் 1, 2
2. கங்காபுதூர்
3. மேட்டுத்தெருக்கள் வடக்கு, மேற்கு வீதிகள்
4. நரசிங்கபுரம் (நரசிம்மன் கோவில் பின்புறம் மற்றும் எதிர்தெரு)
5. பழனியப்பா பைப் கடை பின்புறம் உள்ள தெரு

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

20) **9வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. வெ. தெய்வலிங்கம் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி 9வது கோட்டம்

1. முத்து கவுண்டர் தெரு (ரேஷன் கடை சந்து)
2. நரசிம்மன் கோவில் எதிர்சந்து
3. வெங்கடாஜல காலனி மெயின் ரோடு
4. காந்திநகர்
5. இராமமூர்த்தி புதூர் ஆகிய 5 இடங்களில்

ஆழ்துளை கிணறு (போர்வெல்) அமைத்து மின்மோட்டார் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து கொடுத்து இந்த கோடை கால தண்ணீர் பிரச்சனையை தீர்க்க அவசரம் அவசியம் கருதி இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

21) **17வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி தி.ராஜேஸ்வரி அவர்களின் தீர்மானம்.**

1. 17வது கோட்டத்தின் முக்கிய சாலையாக அத்வைத ஆஸ்ரமம் சாலை உள்ளது. அந்த சாலையில் சிண்டிகேட் பேங்க் முதல் புதிய பஸ் நிலையம் மெயின் சாலை வரை இரண்டு புறமும் சாக்கடை வசதி இல்லை. இதனால் மிகவும் சுகாதார கேடு ஏற்படுகிறது. எனவே அவசரம் அவசியம் கருதி இந்த சாலையில் சாக்கடை வசதி செய்து தருதல்.
2. 17வது கோட்டத்தில் உள்ள CTO காலனி மூன்று மெயின் தெருக்கள் மற்றும் ஒரு குறுக்கு தெருக்களில் சாக்கடை வசதி மற்றும் சாலை வசதி செய்து தருதல்.
3. 17வது கோட்டத்தில் உள்ள சவுத் ஈஸ்ட் லேவுட் பகுதி முக்கிய பகுதியாக உள்ளது. அந்த சாலை வழியாக ஆயிரக் கணக்கான பொதுமக்களும் பள்ளி மாணவ, மாணவிகளும்செல்கின்றனர். அவ்வாறு செல்லக்கூடிய அந்த சாலையானது மிகவும் சேதமடைந்து குண்டும் குரியுமாக உள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். எனவே, அவசரம் அவசியம் கருதி அந்த சாலையில் இருபுறமும் வடிகால் வசதி மற்றும் சாலை வசதி செய்து தருதல்.
4. 17வது கோட்டம் தோப்புக்காடு பகுதியில் கடந்த 25 ஆண்டுகளாக சாக்கடை வசதி இல்லை. இதனால் அப்பகுதி மக்கள் கழிவுநீர் வெளியே செல்லாததால் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். மழை காலங்களில் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே அவசரம் அவசியம் கருதி சாக்கடை வசதி செய்து தருதல்.
5. 17வது கோட்டத்தில் அமைந்துள்ள பாலாஜி நகர், 1.பாலாஜிநகர், 2 விநாயக வித்யாலயா பள்ளி சாலை ஆகிய பகுதியில் சாக்கடை வசதி மற்றும் சாலை வசதி செய்து தருதல்.
6. 17வது கோட்டம் பகுதியில் அமைந்துள்ள பிருந்தாவனம் சாலை மிக முக்கிய சாலையாகும். இப்பகுதியில் வியாபார நிறுவனங்கள், உணவு விடுதிகள், மருத்துவமனைகள், திருமண மண்டபங்கள் ஆகியவை அமைந்துள்ளன. இந்த சாலையின் இடதுபுறம் கைலாஷ்நகர் குறுக்கு தெருக்கள் அமைந்துள்ளது. பிருந்தாவனம் சாலையில் சாக்கடை வசதி இல்லாமல் தற்காலிகமாக சாலையை வெட்டி குறுக்கே 1 அடி அகலமுள்ள பைப் வைத்து ரோட்டின் எதிர்புறம் சாக்கடை நீரை வெளியேற்றுகின்றனர். 1 அடி பைப் அளவில் சாக்கடை நீர் செல்வதால் அதில் பாலிதீன் பைகள், பிளாஸ்டிக் பாட்டில் போன்றவை அடைத்து கொண்டு சாக்கடை நீர் வெளியேற முடியாமல் குடியிருப்புகளில் பின்னோக்கி சென்று விடுகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே அவசரம் அவசியம் கருதி பிருந்தாவனம் ரோடு 6 குறுக்கு தெருக்கள், பிருந்தாவனம் மெயின் சாலை, கைலாஷ்நகர் குறுக்கு தெருக்கள் ஆகியவற்றில் சாலை மற்றும் சாக்கடை வசதி செய்தல்.
7. 17வது கோட்டத்தில் உள்ள வீரபாண்டியார்நகர், ஆலமரக்காடு மெயின் ரோடு போன்ற பகுதிகள் வணிக நிறுவனங்கள் மற்றும் வாகனம் அதிக அளவில் செல்லும் சாலையாகும். அந்த சாலைகள் மிகவும் சேதமடைந்து உள்ளது. சாக்கடை வசதி இல்லை. எனவே அவசரம் அவசியம் கருதி இப்பணியினை உடனடியாக மேற்கொள்ளுதல்.

தொடர்ச்சி..

8. 17வது கோட்டத்தில் அமைந்துள்ள ஏரிக்காடு பகுதியில் அப்போதைய பஞ்சாயத்து சார்பாக சாக்கடை வசதி ஏற்படுத்தப்பட்டது. தற்போது அந்த சாக்கடை வசதி மிகவும் சேதமடைந்து கழிவுநீர் வெளியேற முடியாமல் மிகவும் துர்நாற்றம் வீசுகிறது. மலேரியா, டெங்கு போன்று நோய்கள் அப்பகுதி மக்களுக்கு ஏற்படுகிறது. மேலும் அந்த சாலையை கடந்து மிகப்பெரிய ஓடைநீர் வெளியேறுகிறது. அந்த சாலையை கடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்ட பாலம் மிகவும் சேதமடைந்து உடைந்து விடும் நிலையில் உள்ளது. எனவே அந்த சிறிய பாலத்தை அகற்றி புதிய பாலத்தை கட்டித்தருமாறும், மேலும் ஏரிக்காடு பகுதியில் இருபுறமும் சாலை மற்றும் சாக்கடை வசதி செய்து தருமாறும் அவசரம் அவசியம் கருதி இப்பணியினை உடனடியாக மேற்கொள்ளுதல்.
9. 17வது கோட்டத்தில் அமைந்துள்ள ஆடிட்டர் காலனி, ராம்நகர் பகுதியில் இரண்டு புறமும் கால்வாய் வசதி சேதமடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இதனால் மழை காலங்கள் தண்ணீர் மற்றும் சாக்கடை நீர் கலந்து ரோடுகளில் தேங்கி நின்று விடுகிறது. இதனால் பொதுமக்கள் நடந்து மற்றும் வாகனத்தில் செல்ல முடியாமல் மிகவும் அவதிப்படுகின்றனர். எனவே அவசரம் அவசியம் கருதி உடனடியாக இப்பணியினை மேற்கொள்ளுதல்

மேற்கண்ட பணிகளை செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

22) <u>22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்.</u>

1. சிவதாபுரம் ஜானகிநகர் 1வது தெரு மாரியம்மன் கோவில் எதிர்புறம் இருந்து சம்பத் வீட்டு வழியாக திருமுருகன் நகரில் கழிவுநீர் கால்வாயும் தார்சாலையும் இணைக்க வேண்டும்.
2. ஜானகிநகர்–2 செல்வம் வீடு முதல் திருமுருகன் நகர் வரை தார்சாலையும் சாக்கடை வசதியும்.
3. சின்னக்குட்டி தெரு பெரியாண்டிச்சி அம்மன் கோவில் முதல் மெய்யன் தெரு மெயின் ரோடு வரை சாக்கடை வசதியும், தார்சாலையும்.
4. குடுமியான் தெரு மெயின் ரோடு முதல் மூலக்கடை கவுண்டர் வட்டம் வரை தார்சாலையும் சாக்கடை வசதியும்.
5. குடுமியான் தெரு அருந்ததியர் காலனி எதிர்புறம் சந்து அய்யனார் வீடு வழியாக சாக்கடை வசதியும்.
6. ஏ.வி.சி.நகர் முழுவதும் சூப்பர் மார்க்கெட் சரவணன் வீட்டில் இருந்து மலங்காட்டன் தெரு காளியம்மன் கோவில் வழியாக சித்தர் கோவில் மெயின் ரோடு வரை சாக்கடை வசதியும்.
7. ஆண்டிப்பட்டி மைதானம் டேங்கில் இருந்து பூநிலா நகர் வரை தார்சாலையும் சாக்கடை வசதியும், சிறுபாலமும்.
8. போடிநாயக்கன்பட்டி மாரியம்மன் கோவிலில் இருந்து ஆண்டிப்பட்டி ரோடு வரை தார்சாலையும் சாக்கடை வசதியும்.
9. போடிநாயக்கன்பட்டி மாரியம்மன் கோவிலில் இருந்து ஏரிக்கரை வரை தார்சாலையும் சாக்கடை வசதியும்.

அடிப்படை தேவைகளான மேற்கண்ட பணிகளை செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

23) **22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி கோட்டம் 22 சிவதாபுரம் பகுதியில் 25 ஆண்டுகளுக்கு முன்பு பகுதி நேர நூலகமாக வாடகை கட்டிடத்தில் நூலகம் துவக்கப்பட்டது. தற்போது 13729 புத்தகங்களுடன் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் தற்காலிகமாக ஓர் அறையில் முழுநேர நூலகமாக செயல்பட்டு வருகிறது. பள்ளி அறையில் புத்தகங்கள் வைக்க போதிய இடம் இல்லாததாலும், பள்ளி விடுமுறை நாட்களில் (நூலகம் விடுமுறை இல்லாத) பள்ளி கேட் பூட்டப்பட்டு விடுவதால் நூலகம் திறக்க முடியாத சூழ்நிலை உள்ளது. சிவதாபுரம் மக்களின் பொது அறிவு வளர சிவதாபுரம் பத்திரப்பதிவு அலுவலகம் அருகில் (அ) பெருமாள் கோவில் கரடு – அங்கன்வாடி கட்டிடம் அருகில் ஏதேனும் ஓர் இடத்தில் மாநகராட்சி கல்வி நிதியில் இருந்து நூலகத்திற்கு ஒரு கட்டிடம் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

24) **22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி கோட்டம் 22ல் உள்ள

1. ஆண்டிப்பட்டி மயானம்
2. மெய்யந்தெரு மயானம்
3. குடுமியான் தெரு மயானம்

ஆகிய மூன்று மயானங்களையும் நில அளவீடு செய்து, சுற்று சுவர் அமைத்து தரவும், கரும காரியங்கள் செய்திட ஆழ்துளை கிணறு அமைத்து, சின்டெக்ஸ் வைத்து, குளியல் அறை ஏற்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

25) **22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்.**

மாநகராட்சி எல்லை ஆரம்பம் பனங்காடு முருகன் அரிசி கடையில் இருந்து சிவதாபுரம் முத்து மண்டபம் வரை தேசிய நெடுஞ்சாலையில் மழைநீர் வடிகால் வசதி 10 அடி ஆழம் 5அடி அகலத்தில் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

26) **22வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.கே.சி.செல்வராஜ் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி 22வது கோட்டம், போடிநாயக்கன்பட்டி ஏரியில் உள்ள ஆகாயத்தாமரையை நீக்கி, தூர் வாரி ஏரிக்கரை ரோடு அகலப்படுத்தி சுற்றுவட்டார பகுதி மக்கள் பயன்படும் விதமாக படகு இல்லம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

27) **27வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி கு. சவிதா அவர்களின் தீர்மானம்.**

27வது கோட்டத்திற்கு உட்பட்ட பாவேந்தர் தெருவில் உள்ள ஆண்கள், பெண்கள் சுகாதார கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. எனவே அதே இடத்தில் சுகாதார கழிப்பிட வளாகம் புதியதாக கட்டி தரவும், மேலும் சின்னப்பன் தெருவில் உள்ள சுகாதார கழிப்பிடத்தில் உள்ள கதவுகள் மற்றும் கழிவறைகள் மிகவும் சேதமடைந்துள்ளது. எனவே அவற்றை சீரமைத்து தரவும் மேலும் சின்னப்பன் தெருவில் உள்ள சுகாதார கழிப்பிடம் அருகில் இருந்து பிரசவ ஆஸ்பத்திரி செல்லும் சாலை மிகவும் குண்டும் குழியுமாக உள்ளது. அதேபோன்று பஜனைமடம் தெருவிலிருந்து அரிசிப்பாளையம் மாரியம்மன் கோவில் செல்லும் சாலை மிகவும் குண்டும் குழியுமாக உள்ளது. எனவே இந்த இரண்டு சாலைகளிலும் புதியதாக கான்கிரீட் சாலை அமைத்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**28) 31வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஏ.சையத்மூசா அவர்களின் தீர்மானம்.**

31வது கோட்டத்திற்கு உட்பட்ட ஹபீப் தெருவில் அமைந்துள்ள கழிவுநீர் சாக்கடை இருபுறமும் கான்கிரீட் தடுப்புசுவர் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் சாக்கடை அடைப்பு ஏற்பட்டு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. அந்த சாக்கடைகள் முறையின்மை காரணமாக அடிக்கடி சாக்கடை அடைப்பு பிரச்சனையும் ஏற்படுகிறது. ஆகவே, மேற்டி ஹபீப் தெருவில் சாக்கடை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**29) 32வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி க.பௌமிகா தப்சிரா அவர்களின் தீர்மானம்.**

32வது கோட்டத்திற்கு உட்பட்ட முத்துவள்ளி முகமது யாகூப் தெரு, வெள்ளைக்குட்டை பகுதியில் உள்ள சேலம் மாநகராட்சி உருது துவக்கப்பள்ளி 50 வருட பழமை வாய்ந்தது. இப்பள்ளி மிகவும் சிதிலமடைந்து உள்ளது. இப்பள்ளி தரைதளம் மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளதால் மழைகாலங்களில் ஓடை தண்ணீர் முழுவதுமாக பள்ளிக்குள் வந்து மிகவும் சிரமமாக உள்ளது. அதேபோல் பள்ளியின் மேல் கூரை பழுதடைந்து எப்போது வேண்டுமானாலும் விழும் நிலையில் உள்ளது. இதனால் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. எனவே இப்பள்ளியை அருகில் உள்ள மார்கெட் தெருவில் உள்ள மாநகராட்சி பள்ளியில் இணைத்து செயல்படுத்தலாம். இப்போது உள்ள பள்ளியை இடித்து விட்டு புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் கட்டினால் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். எனவே விரைந்து நடவடிக்கை எடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**30) 32வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி க.பௌமிகா தப்சிரா அவர்களின் தீர்மானம்.**

32வது கோட்டத்தில் மேட்டு மக்கான் தெருவில் உள்ள 48, 50, 52 மற்றும் அரசமர பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள 173, 174 ஆகிய எண் கம்பங்களில் உள்ள லைட்டுகள் வெளிச்சம் இல்லாமல் உள்ளது. மேலும் மேட்டு மக்கான் தெருவில் உள்ள 68 எண் உள்ள கம்பத்தில் லைட் பிட்டிங் எதுவும் இல்லாமல் உள்ளது.

பழைய கோட்டம் எண்.33ல் வால்மீகி தெரு 22, 26 எண் மற்றும் வால்மீகி தெருவிற்கும் மார்கெட் தெருவிற்கும் இடையில் உள்ள கம்பத்திலும் லைட்டுகள் வெளிச்சம் இல்லாமல் உள்ளது. முத்தவல்லி யாகூப் தெருவில் நான்குரோடு சேரும் இடத்தில் உள்ள கம்பத்திலும் மற்றும் 18, 19, 20, 64ஏ, 69, 70, 77, 78, 80, 82 எண் உள்ள கம்பத்திலும் லைட்டுகள் வெளிச்சம் இல்லாமல் உள்ளது.

எனவே அங்கு உள்ள பல்புகளை மாற்றி 90 வாட்ஸ் பல்வுகளை போடவும், லைட் பிட்டிங் செட் புதியதாக போட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

31) **35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா.பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்.**

அம்மாபேட்டை மண்டலம் 35வது கோட்டத்தில் உள்ள நஞ்சம்பட்டி காலனியில் குடிநீர் பைப், பிளாஸ்டிக்கில் பைப் ஆக உள்ளதை மாற்றி 6'' இரும்பு பைப்பாக மாற்ற (நீளம் 300 அடி தூரம்) (நஞ்சம்பட்டி காலனி மிலிடெரி ரோடு ஐயங்கார் காபி கடை அருகே இருந்து நஞ்சம்பட்டி மாரியம்மன் கோவில் வழியாக சுண்ணாம்புக்கார தெரு வரை) இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

32) **35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா.பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்.**

அம்மாபேட்டை மண்டலம் 35வது கோட்டம், எல்லப்பன் தெருவில் உள்ள மாநகராட்சி ஆரம்பப் பள்ளியின் திடல், மண்திடல் ஆக உள்ளதை மாற்றி கான்கிரீட் திடல் அல்லது சிமெண்ட் கல் பதிக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

33) **35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா.பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்.**

அம்மாபேட்டை மண்டலம் 35வது கோட்டத்தில் உள்ள கிருஷ்ணன் புதூர் ரெயில் கேட்டுக்கு அருகில் உள்ள இரண்டு தெருக்களுக்கு சாக்கடை வசதியும், சிமெண்ட் தளமும் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

34) **35வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா.பச்சியம்மாள் அவர்களின் தீர்மானம்.**

அம்மாபேட்டை மண்டலம் 35வது கோட்டம் நஞ்சம்பட்டி காலனியில், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளிகள் விளையாட்டு திடல் தெருவின் வழியாக குடிநீர் வழங்கும் பைப் 3'' இஞ்ச் ஆக உள்ளது.

தற்சமயம் சாக்கடை, சாலைவசதி நடைபெற உள்ளதால், மேற்படி குடிநீர் வழங்கும் குழாய் 6 இஞ்ச் ஆக மாற்ற இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

35) **37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்.**

37வது கோட்டத்தில் கீழ்கண்ட இடங்களில் மேல்நிலை நீர்தேக்க டேங்க் அமைத்தல்.

1. பத்திரபதிவு மற்றும் ஆர்.டி.ஓ. ஆபீஸ் அருகில் எம்.சி.சி. சென்டர் அருகில் 5 லட்சம் கொள்ளளவு குறையாமல் டேங்க் அமைத்தல்.
2. சாஸ்திரி நகர்.
3. காமராஜ் நகர் காலனி
4. செல்வநகர்

ஆகிய இடங்களில் மேல்நிலை டேங்க் நீர்தேக்க தொட்டி அமைத்தால் பொதுமக்களுக்கு நிரந்தரமாக குடிநீர் சப்ளையும், மாநகராட்சிக்கு வருவாய் அதிகம் கிடைக்கும் என்பதால் மேலே கண்ட இடங்களில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

36) **37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி 37வது கோட்டம் பகுதியில் உள்ள காமராஜ் நகர் காலனி நடுநிலைப்பள்ளியில் சுமார் I முதல் V ம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை சுமார் 1500 மாணவ, மாணவிகள் படிக்கும் இடங்களில் போதுமான கட்டிட வசதியும் இல்லை. மேலும் பழுதடைந்து உள்ள பள்ளி கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் மாணவ, மாணவிகளின் படிக்கும் நிலையை உறுதிசெய்ய கூடுதலாக ஆறு கட்டிட வகுப்பறைகள் கட்டிடம் கட்டவும் மேலும் குழந்தைகளின் படிப்பும் எதிர்காலம் கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் அவர்கள் ஆணைப்படி கல்வி படிப்பை கருத்தில் கொண்டும் உடனடியாக ஆறு வகுப்பறைகள் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

37) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்.</u>

37வது கோட்டத்தில் உள்ள பெருமாள் கோயில் டேங்க் மூலமாக புதியதாக குடிநீர் பைப் லைன் அமைத்து கீழ்கண்ட இடங்களுக்கு குடிநீர் சப்ளை செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. தத்ரியு கார் கம்பெனி (பெட்ரோல் பங்க் கிழக்குபுறம்)
2. பெட்ரோல் பங்க் வடக்குபுறம்.
3. மாரியம்மன் நகர் மேற்குபுறம்.

நாமமலை டேங்க் மூலமாக புதியதாக குடிநீர் பைப் லைன் அமைத்து கீழ்கண்ட இடங்களுக்கு குடிநீர் சப்ளை செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. காட்டுவளைவு ரஷ்யா பகுதி கிழக்குபுறம்
2. கொங்குநகர் (ரஷ்யா பகுதி தெற்கு புறம்)

குட்டிக்கரடு டேங்க் மூலமாக புதியதாக குடிநீர் பைப் லைன் அமைத்து கீழ்கண்ட இடங்களுக்கு குடிநீர் சப்ளை செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. பெரியார் நகர் புதுப்பேட்டை செல்லும் வழி.
2. குமரகிரிபேட்டை முழுவதும்
3. குமரகிரிபேட்டை பைபாஸ் முதல் கோயில் அடிவாரம் வரை.
4. குட்டிகரடு பகுதி முழுவதும்

மேற்கண்ட இடங்களில் புதியதாக பைப் லைன் அமைத்து மாநகராட்சிக்கு வருவாயை கூடுதல் செய்யவும், பொதுமக்களின் குடிநீர் பிரச்சனையை தீர்க்கவும் இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

38) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி 37வது கோட்டம் பகுதியில் குமரகிரிபேட்டை மற்றும் புதுப்பேட்டை குட்டிக்கரடு ஆகிய பகுதிகளில் வசத்துவரும் மாணவ, மாணவிகளில் படிப்பதற்கு குமரகிரிபேட்டை பகுதியில் உள்ள பள்ளிக்கூடம் நடுநிலைப்பள்ளியாகும். மேலும் இந்த கட்டிடம் கட்டி சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலான பழமையான கட்டிடம், ஓட்டு கட்டிடம், மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே, தமிழக முதல்வரின் அனைவருக்கும் கல்வி திட்டம் மற்றும் இல்லம் தேடி கல்வி திட்டம் ஆகிய இரண்டு திட்டத்தினை செயல்படுத்திட இந்த பகுதியில் கூடுதல் வகுப்பு அறைகள் நான்கு வகுப்பு அறைகள் மற்றும் பழுதடைந்து உள்ள கட்டிடம் அகற்றிவிட்டு புதிய கட்டிடம் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

39) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்.</u>

37வது கோட்டம் பகுதியில் உள்ள உடையாப்பட்டி பைபாஸ் (செல்வநகர் எதிர்புறம் தெற்கு) உள்ள ஆதிதிராவிடர் மயானம் சுமார் 1500 குடும்பங்களுக்கு மேலாக பயன்படுத்தும் மிக பழமையான மயானம் ஆகும். மேலும் இந்த மயானம் சுற்றுச்சுவர் இல்லாமலும் அடிப்படை வசதி ஏதும் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாலும் அந்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பலமுறை ஆட்சித் தலைவர் மாநகராட்சி ஆணையாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர், மாமன்ற உறுப்பினர் வசம் மனு அளித்து உள்ளனர். மேலும் இந்த மயானம் ஆதிதிராவிடர் பயன்படுத்தும் மயானம் என்பதை கருத்தில் கொண்டு சுற்றுச்சுவர், தகனமேடை, குடிநீர் வசதி, மின்வசதி, கழிப்பிட வசதி, இறுதி சடங்கும் செய்ய காரியம் செய்வதற்கு தேவையான தரைதளம் அமைத்து கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

40) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்.</u>

37வது கோட்டம் பகுதியில் உள்ள மாரியப்பன் நகர் மற்றும் எம்.ஜி.ஆர். நகர் ஆகிய இரண்டு பகுதிகளிலும் வாழும் பொதுமக்கள் மழைகாலங்களில் செல்வதற்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளனர். மேலும் பலமுறை தண்ணீர் ஓடைகளில் அதிகம் வந்து வீடுகளுக்கு சென்று பலபொருள் சேதம் ஏற்படுத்தப்படுகிறது. எனவே, பொதுமக்களின் பயணத்தை கருத்தில் கொண்டும், மழைகாலங்களில் பொருள் சேதம், உயிர்சேதம் ஏற்படாமல் இருக்க இந்த இரண்டு இடங்களில் உயர்பாலம் கட்டவும், மேலும் பணிகள் அவசியம் என்பதால் போக்குவரத்து இடையூறு ஏற்படுகிற காரணத்தை ஏற்று இந்த இரண்டு இடங்களிலும் உயர்பாலம் கட்ட இந்த மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

41) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்.</u>

37வது கோட்டம் பகுதியில் உள்ள காமராஜ்நகர் நெசவாளர் காலனி, மாரியம்மன் நகர், எம்.ஜி.ஆர்.நகர், செல்வநகர் மற்றும் இதே பகுதியை சுற்றி உள்ள சுமார் ஐந்து ஆயிரம் குடும்பங்கள் மேலாக வசித்து வருகின்றனர். மேலும் அவசர காலங்களிலும், பிரசவ காலங்களிலும், விபத்து காலங்களிலும் சிகிச்சை பெறுவதற்கு நீண்டதூரம் பயணம் செல்வதால் உயிர்சேதம் ஏற்படும் நிலை பல நேரங்களில் நடைபெறகிறது. எனவே, மேலே உள்ள காரணங்களை ஏற்று மைய பகுதியான காமராஜ் நகர் நெசவாளர் காலனியில் உள்ள 7வது தெருவில் உள்ள பொது இடத்தை ஆரம்ப சுகாதார மருத்துவமனை கட்டிடம் கட்ட இந்த மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

42) <u>37வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு.மா.திருஞானம் அவர்களின் தீர்மானம்.</u>

37வது கோட்டம் பகுதியில் உள்ள மாரியப்பன்நகர், திவான் தோட்டம், கைத்தறி நெசவாளர் குடியிருப்பு ஆகிய பகுதியில் சாக்கடை வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் நோய்வாய்பட்டு கழிவுநீர் சாலை வழியாக செல்வதால் இதை கடந்து செல்வதற்கு மிகவும் அவதிபடுகின்றனர். மேலும் இதே நிலையில் உள்ள புதுப்பேட்டை பகுதியிலும் இந்த நிலையில் தான் வசித்து வருகின்றனர். எனவே, பொதுமக்களின் அடிப்படை வசதி என்பதை ஏற்று மேலே கண்ட இடங்களில் சாக்கடை வசதி செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**43) 39வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி மா.ஜெயந்தி அவர்களின் தீர்மானம்.**

I. பள்ளிகள்

1. வையாபுரி தெரு நகரவை உயர்நிலைப்பள்ளி
   - (i) கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் – 4
   - (ii) கூடுதல் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி–2
   - (iii) வகுப்பறைகள் மராமத்து பணிகள் (கதவு, ஜன்னல், தரைதளம்)
   - (iv) மாணவர்களுக்கு மிதிவண்டி நிழற்கூடம்.
   - (v) அலமாரிகள்–2

2. வையாபுரி தெரு மாநகராட்சி துவக்கப்பள்ளி
   - (i) வகுப்பறை கட்டிடம் – 4
   - (ii) கழிப்பறைக்கு நீர் வசதி
   - (iii) கழிப்பறை வசதி (ஆண்கள்)
   - (iv) பீரோ–4
   - (v) போர்வெல் வசதி
   - (iv) குடிநீர் வசதி

3. பசுபல குருநாதன் தெரு மாநகராட்சி துவக்கப்பள்ளி
   - (i) மாணவர்கள் அமர்ந்து சாப்பிட தரைதளம்
   - (ii) கழிப்பறை வசதி–2
   - (iii) வகுப்பறைகள்–3
   - (iv) கழிவுநீர் குழாயை பாதாள சாக்கடையுடன் இணைத்தல்.
   - (v) குடிநீர் வசதி

II. தெருக்களின் பெயர்களை குறிப்பிடும் கைக்காட்டி பெயர்பலகை வைத்தல்

- (i) மாருதிநகர் முழுவதும்
- (ii) சாமிதெரு
- (iii) செம்பட முனியப்பன் கோயில் தெரு
- (iv) சின்னமுத்து தெரு
- (v) செங்கோடன் தெரு மற்றும் பழுதடைந்த தெருக்களின் பெயர் பலகைகளை சரிசெய்தல்.

III. சாக்கடை மற்றும் சாலை வசதி

- (i) குமாரமுத்துசாமி தெரு
- (ii) பசுபல குருநாதன் தெரு
- (iii) அகர நஞ்சப்பன் தெரு
- (iv) நிம்மன சமுத்திரய்ய தெரு
- (v) விவேகானந்தர் தெரு
- (vi) முனியப்பன் கோயில் தெரு
- (vii) சின்னமுத்து தெரு
- (viii) செங்கோடன் தெரு
- (ix) மாருதிநகர் (முழுவதும்)

தொடர்ச்சி..

IV. குமரகிரி ஏரியில் ஏற்கனவே 1.25 ஏக்கர் நிலத்தில் இப்பகுதியில் வாழும் வண்ணார் சமூகத்தினர்காக துணி துவைக்க இடம் ஒதுக்கி 2002ம் ஆண்டு சுற்றுச்சுவர் கட்டப்பட்டது. அதில் துணி துவைத்து பாதுகாப்பாக வைக்க கட்டிடமும், கழிப்பிட வசதியும் மற்றும் குடிநீர் வசதியும் இல்லை. சுற்றுச்சுவர் இப்பொழுது பழுதடைந்து உள்ளது. ஆகவே அச்சமூக மக்கள் பயன்பெறும் வகையில் சுற்றுச்சுவர், கழிப்பிட வசதி, குடிநீர் வசதி மற்றும் பாதுகாப்பு அறை ஆகியவை கட்டிக்கொடுத்தல்.

V. தெருவிளக்குகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாருதிநகர் | – | 7 விளக்குகள் |
| 2. | சாமி தெரு | – | 2 விளக்குகள் |
| 3. | பெரிய கிணறு தெரு 1, 2, 3 | – | 6 விளக்குகள் |
| 4. | சௌந்தர்ய தெரு | – | 3 விளக்குகள் |
| 5. | முனியப்பன் கோயில் தெரு | – | 4 விளக்குகள் |
| 6. | எரவாடத் தெரு | – | 3 விளக்குகள் |
| 7. | விவேகானந்தர் தெரு | – | 2 விளக்குகள் |
| 8. | நந்தனார் தெரு | – | 3 விளக்குகள் |
| 9. | மெத்தை தெரு | – | 2 விளக்குகள் |

VI. ஆழ்துளை கிணறு

1. குமாரமுத்துசாமி தெரு மற்றும் பசுபல சித்தையன் தெருவில் மின்மோட்டார் திருட்டுபோய் 4 வருடம் ஆகிறது. அப்பகுதி மக்கள் தண்ணீர் பிடிக்க முடியாமல் அவதிபட்டு வருகின்றனர். ஆகவே புதிய மின்மோட்டார் பொருத்தி தருதல்.
2. பெரிய கிணறு தெருவில் இராஜ காளியம்மன் கோவில் அருகில் கைபம்பு ஆழ்துளை கிணறு உள்ளது. அதைமாற்றி மின்மோட்டார் பொருத்தி, வாட்டர் டேங்க் அமைத்து தருதல்.
3. பழுதடைந்து உள்ள அனைத்து ஆழ்துளை கிணறு மோட்டார்களை சரிசெய்தல்.

VII. கல்வெட்டு (சிறுபாலம்)

1. பெரிய கிணறு தெரு சி.எம்.கே.சில்க் அருகில் இரு சிறுபாலங்கள் அமைத்தல்.
2. லட்சுமி நகரில் ஒரு சிறுபாலம் அமைத்தல்.

VIII. எரவாடத்தெருவில் சுமார் 50 குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு குடிநீர் பிரச்சனை தீர பூவாத்தாள் தெரு மெயின் பைப்பில் இருந்து மெயின் குழாய் பதித்தல்

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**44) 41வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி சே.பூங்கொடி அவர்களின் தீர்மானம்.**

41வது கோட்டத்தில் உள்ள சேர்மன் இராமலிங்கம் ரோடு, அன்னை திருமண மண்டபம் செல்லும் வழியில் மிகவும் பழுதடைந்து பழைய கட்டிடம் உள்ளது. அது இடிந்து விழும் நிலையில் உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி அந்த பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு பொதுமக்கள் பயன்படும் வகையில் சிறிய மருத்துவமனை கட்டிடம் ஒன்று கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

45) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்.</u>

1. சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் புதிய சுண்ணாம்பு சூளை பகுதியில் உள்ள குடியிருப்பில் குப்பை மேட்டில் இருந்து வழிந்து வரும் மழைநீரால் ஒவ்வொரு வருடமும் மக்கள் கடும் இன்னலுக்கு உள்ளாகின்றனர். வீடுகள் பல இடிந்து போய் உள்ளன. ஆகவே குப்பைமேட்டில் இருந்து வழிந்து வரும் மழைநீரை வெளியேற்ற 500 மீட்டர் நீளத்திற்கு கால்வாய் மற்றும் சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

2. சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் கஸ்தூரிபாய் தெரு அக்னி மாரியம்மன் கோவில் அருகில் இருந்து காத்தான் கோவில் வரும் வழியில் மழைநீர் வழிந்தோடும் கால்வாய் அமைத்து 30 ஆண்டு காலம் ஆகியதால் தற்போது சிதிலமடைந்துபோய் உள்ளது. மழைகாலங்களில் மழைநீர் வழிந்தோட வசதியில்லாமல் சாலைகள் பெயர்ந்து போய் உள்ளது. ஆகவே கஸ்தூரிபாய் தெரு காத்தான் கோவில் அருகில் இருந்து அக்னி மாரியம்மன் கோவில் வரை மழைநீர் வழிந்தோட கால்வாயும், சாலையும் சுமார் 500 மீட்டர் அளவிற்கு போட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
3. சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் சுமார் 40 குப்பை தொட்டிகளை ஆங்காங்கே அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

46) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் உள்ள கரீம் காம்பவுண்ட் பகுதியில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு தார்சாலை போடப்பட்டுள்ளது. அந்த தார்சாலை ஆங்காங்கே பெயர்ந்து போய் உள்ளது. ஆகவே உடனடியாக கரீம் காம்பவுண்ட் பகுதியில் உள்ள பழுதான தார்சாலையை பழுது நீக்கி புதிய தார்சாலையை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

47) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்துக்குட்பட்ட களரம்பட்டி மெயின் ரோட்டில் தற்போது அமைந்திருக்கும் வார்டு அலுவலகமானது இடிந்து விழும் நிலையில் உள்ளதால் துரித கதியில் செயல்பட்டு உடனடியாக 44வது வார்டுக்கு புதிய வார்டு அலுவலகம் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

48) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி எருமாபாளையம் நடுநிலைப்பள்ளியானது 44வது கோட்டத்தில் அமைந்துள்ளது. இந்த பள்ளியை கட்டி சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 44வது கோட்டத்தில் சுமார் 6000க்கும் மேலான பட்டியலின மக்கள் வசித்து வருவதால் இந்த பள்ளியில் போதுமான இடவசதி இருப்பதால் இந்த பள்ளியை மேல்நிலைப்பள்ளியாகவோ, உயர்நிலைப்பள்ளியாகவோ தரம் உயர்த்த ஏதுவாக இந்த பள்ளி வளாகத்தில் புதிய கட்டிடங்களை கட்ட நிதி ஒதுக்கி ஸ்மார்ட் பள்ளியாக தரம் உயர்த்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

49) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் TNTSC பஸ் டிப்போ முன்புறம் புதிதாக ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்மோட்டாருடன் கூடிய தண்ணீர் டேங்க் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

50) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் உள்ள விஜயகணபதி தெருவில் பெயர்பலகை இல்லை. ஆகவே மாநகராட்சி சார்பாக பெயர்பலகை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

51) <u>44வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மு. இமயவர்மன் அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சி 44வது கோட்டத்தில் உள்ள கோவிந்தசாமி நகர் எக்ஸ்டென்சன் சிங்காரம் காடு பகுதியில் கடந்த 20 ஆண்டுகாலமாக மண் சாலையாகவும், Unapproved Land ஆகவும் உள்ளது. அதே போல் 7th day school அருகே மண்சாலை உள்ளது. ஆகவே சிங்காரம் காடு பகுதிக்கு கழிவுநீர் கால்வாய் மற்றும் தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

52) <u>47வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.புனிதா அவர்களின் தீர்மானம்.</u>

அன்னதானப்பட்டி (கருவாட்டு மண்டி) பகுதியில் இருக்கும் பொது கழிப்பிடம் மிகவும் பழுதடைந்து உள்ள நிலையில் அதை மக்கள் பயன்படுத்துவதற்கு சிரமமாக இருப்பதால் அதனை மறு சீரமைத்து தருமாறும், அன்னதானப்பட்டி நடுநிலைப்பள்ளியில் இருக்கும் அங்கன்வாடி குழந்தைகளுக்கு கழிப்பிட வசதி இன்மையால் கழிப்பிட வசதி வேண்டியும், அன்னதானப்பட்டி தண்ணீர் தொட்டியின் அருகில் அமைந்திருக்கும் பொது கழிப்பிடம் பூட்டி இருப்பதால் அதை திறந்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

53) <u>47வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.புனிதா அவர்களின் தீர்மானம்.</u>

இராமலிங்கசாமி கோவில் தெருவுக்குள் சிமெண்ட் சாலை வசதி மற்றும் சாக்கடை கழிவுநீர் வசதி வேண்டியும் பென்சன் லைன் வடக்கு தெரு (OGV அபார்ட்மெண்ட்) தெருவுக்கு சிமெண்ட் சாலை மற்றும் சாக்கடை கழிவுநீர் வசதி வேண்டியும் முருகன் நகருக்குள் பாதாள சாக்கடை மற்றும் ரோடு வேண்டியும் 47வது கோட்டத்தில் பெருவாரியான இடங்களில் மின்கம்பங்கள் மற்றும் மின்விளக்குகள் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

54) <u>47வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.புனிதா அவர்களின் தீர்மானம்.</u>

ஆண்டிப்பட்டி ஏரி அடுக்குமாடி குடியிருப்புகளில் 3000 மக்கள் தொகை வசிக்கும் சூழ்நிலையில் அங்கு கல்வி கற்க குழந்தைகளுக்கு சரியான இடவசதியின்மையாலும், மேலும் மக்களுக்கு சுபகாரியங்கள் செய்வதற்கு சமுதாய கூடம் இன்மையாலும், அங்கு வாழும் மக்களுக்கு அங்கன்வாடியும் சமுதாய கூடமும் கட்டுவதற்கு ஏற்ற இடவசதி அதிகளவு இருப்பதாலும் அங்கன்வாடியும் சமுதாயக்கூடமும் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

55) <u>54வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி க.கனிமொழி அவர்களின் தீர்மானம்.</u>

சேலம் மாநகராட்சிக்கு உட்பட்ட 54வது கோட்டத்தில் கீழ்காணும் தெருக்களில் பல ஆண்டு காலமாக வடிகால், சிசிரோடு மற்றும் தார்சாலை பழுதடைந்துள்ளது. அதனால் வடிகால், சிசி ரோடு மற்றும் தார்சாலை அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

1. வேலு தெரு.1
2. வேலு தெரு.2
3. வேலு தெரு.3
4. தர்மலிங்கம் தெரு.1
5. தர்மலிங்கம் தெரு.2
6. தர்மலிங்கம் தெரு.3

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**56)** **55வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தனலட்சுமி அவர்களின் தீர்மானம்.**

55வது கோட்டத்திலுள்ள மாரியம்மன் கோவில் தெரு–1ல் பாதாள சாக்கடை (UGD) வேலை நடைபெற்று பல ஆண்டுகள் ஆகின்ற நிலையில் சாலை, சாக்கடை வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட தெருவில் சாலைவசதி, சாக்கடை வசதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**57)** **55வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தனலட்சுமி அவர்களின் தீர்மானம்.**

55வது கோட்டத்தில்

1. மாரியம்மன் கோவில் தெரு–1
2. மாரியம்மன் கோவில் தெரு–7

ஆகிய தெருக்களில் பாதாள சாக்கடை (UGD) வேலை நடைபெற்று பல ஆண்டுகள் ஆகிறது. சாலை, சாக்கடை பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட தெருக்களில் சாலை, சாக்கடை வசதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**58)** **55வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தனலட்சுமி அவர்களின் தீர்மானம்.**

55வது கோட்டத்தில் உள்ள மாரியம்மன் கோயில் தெரு–7ல் பாதாள சாக்கடை (UGD) வேலை நடைபெற்று பல ஆண்டுகளாக சாலை, சாக்கடை வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட தெருவில் சாலை, சாக்கடை வசதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**59)** **55வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.தனலட்சுமி அவர்களின் தீர்மானம்.**

55வது கோட்டத்திலுள்ள சஞ்சீவிராயன்பேட்டை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள ஓட்டு கட்டிடம் மிகவும் பழுதடைந்து மோசமான நிலையில் உள்ளது. பள்ளி மாணவ, மாணவிகள் நலன்கருதி பழுதடைந்த ஓட்டு கட்டிடத்தை இடித்து புதிய தார்சு கட்டிடம், திருச்சி மெயின் ரோடு முன்பகுதியில் கடைகள் கட்டுவதற்கு போதுமான இடம் உள்ளதால் பள்ளி மாணவ, மாணவிகள் நலன் கருதி, புதிய தார்சு கட்டிடம், கடைகள் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**60)** **57வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. மா. சீனிவாசன் அவர்களின் தீர்மானம்.**

அரசு பள்ளிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கை அதிகமாக உள்ளது. ஆகவே நகரவை துவக்கப்பள்ளி களரம்பட்டி சேலம்–15ல் உள்ள பள்ளியில் புதிய வகுப்பறைகள் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**61) 58வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. ரா. கோபால் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.58. 9ம்பாலி பகுதியில் கழிப்பிட வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே பொது கழிப்பிடம் அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**62) 58வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. ரா. கோபால் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலம் கோட்டம் எண்.58ல் கற்பக விநாயகர் கோவில் தெரு, புத்து மாரியம்மன் கோவில் தெரு, செயின் தாமஸ் பள்ளி வீதி ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால், சாலை வசதி அமைக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**63) 59வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. பெ. முருகன் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட 59வது கோட்டத்தில் மேற்கு தெரு 1 மற்றும் 2 ஆகிய தெருக்களில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பே சாக்கடை மற்றும் தார்சாலை போடப்பட்டுள்ளது. தற்பொழுது அவைகள் பழுதடைந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மேலும் சாக்கடை நீர் சாலையில் தேங்குவதால், கிருமிகள் உற்பத்தியாகி நோய் பரவும் சூழ்நிலையும், தார்சாலைகள் மோசமான நிலையில் உள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு மிகவும் இடைஞ்சலாகவும் உள்ளது.

எனவே, இப்பகுதியில் சாக்கடை மற்றும் தார்சாலை அமைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழிவகை செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**64) 59வது கோட்ட மாமன்ற உறுப்பினர் திரு. பெ. முருகன் அவர்களின் தீர்மானம்.**

சேலம் மாநகராட்சி கொண்டலாம்பட்டி மண்டலத்திற்கு உட்பட்ட 59வது கோட்டத்தில் வேலுநகர் 2வது தெருவில் தற்பொழுது உள்ள இருபாலருக்கான பொதுகழிப்பிடம் பொதுமக்கள் உள்ளே நுழைவதற்குகூட இயலாத நிலையில் மிகமிக மோசமான நிலையில் பழுதடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உதவாமல் மூடி வைக்கப்பட்ட நிலையில் உள்ளது. அப்பகுதி நெசவாளர்கள் மற்றும் கூலித்தொழிலாளர்கள் வாழும் பகுதியாகும். 59வது கோட்டத்திற்கே, அந்த ஒரேயொரு கழிப்பிடம் தான் உள்ளது. அதுவும் பயனின்றி மூடப்பட்டு உள்ளது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் கழிப்பிட வசதியின்றி, மிகமிக சிரமப்படுகின்றனர். மேலும் பெண்கள் மிகவும் இன்னலுக்குள்ளாகின்றனர்.

எனவே, பொதுமக்களின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட கழிப்பிடத்தை அகற்றிவிட்டு, புதிதாக ஒரு பொதுகழிப்பிடம் கட்ட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

தீர்மானம். தீர்மானம் நிறைவேறியது.

**65)** சேலம் மாநகராட்சி அம்மாபேட்டை வார்டு அலுவலகத்திற்குட்பட்ட பொது சுகாதார பிரிவு காம்பாக்டர் வாகனம் எண்.TN30AT4663–க்கு இன்ஜின் ஓவராயிலிங் பழுது பணிகள் மேற்கொள்ள ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று உள்ளூர் அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளிலிருந்து விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் **07.02.2022**ம் தேதியில் கீழ்க்கண்ட விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| **1.** | மெசர்ஸ். எம்.ஆர்.ஆட்டோ ஒர்க்ஸ், | **ரூ.1,22,000/–** |
| **2.** | மெசர்ஸ்.ஜே.வி.கே.ஆட்டோ ஒர்க்ஸ் | **ரூ.1,27,000/–** |
| **3.** | மெசர்ஸ்.டி.வி.எஸ்.மொபிலிடி(பி)லிமிடெட் | **ரூ.1,50,350/–** |

பொது சுகாதார பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு, மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள மெசர்ஸ். எம்.ஆர்.ஆட்டோ ஒர்க்ஸ்,சேலம் என்ற நிறுவனத்தினரின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி ஆணை வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும், இப்பணிக்கான செலவினத்தொகை வழங்கிடவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

அனுமதிக்கலாம்.

**(எல்12/892/2021)**

தீர்மானம். அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) ஆ. இராமச்சந்திரன்
மேயர்
சேலம் மாநகராட்சி.

சேலம்–1.
24–06–2022.